# எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - மலேரியா சுற்று 8 கூறு- 2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டுத் நியமங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 195,880,756 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 915,807,280 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 26,021,667 | 23,011,831 | 83,496,826 |
| மலேரியா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 169,859,089 | 592,235,828 | 832,310,454 |
| | 195,880,756 | 615,247,659 | 915,807,280 |

## 2.2 காசுப் பாய்ச்சல் கூற்று

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி காசுப் பாய்ச்சல கூற்றின் நிலைமை கழே தரப்படுகின்றன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | |
|---|---|---|
| | 2012 | 2011 |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பய்ச்சல்** | ரூபா | ரூபா |
| வெளிநாட்டு உதவி- மானியம் (வாக்குப்பண பேரேடு-13) மற்றும் வெளிநாட்டு உதவி தொடர்புபட்ட உள்நாட்டு நிதிகள் (வாக்குப்பண பேரேடு- 17) என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட காசு | 185,000,000 | 664,427,415 |
| கேள்வி வருமானத்திலிருந்து பெறப்பட்ட காசு | 14,000 | 68,435 |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்களிற்காக செலுத்தப்பட்ட காசு | (169,859,089) | (592,235,828) |
| வழங்கப்பட்ட முற்பணங்கள் (தேறிய) | 41,207,573 | 45,291,618 |
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு (பிடித்துவைத்தல் வரி மற்றும் பிடிகாசு) | (80,403) | (1,066,109) |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு | 56,282,081 | 28,034,513 |

| | | |
|---|---|---|
| | ========= | ========= |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| நிலையான சொத்துக்கள் | (26,021,668) | (23,011,831) |
| மீளளிக்க வேண்டிய வைப்புக்கள் -வைப்பகம் | (40,000) | |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | (26,061,668) | (23,011,831) |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| திறைசேரிக்கு திருப்பி அனுப்புதல்கள் | (30,220,413) | (5,022,682) |
| | (56,282,081) | (28,034,513) |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(i) ரூபா 1,285,650 தொகையான நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப்பட்ட விதம் இலங்கை கணக்கீட்டு நியம இல 01 இல் வேண்டப்பட்டவாறு நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகளாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,544,142 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்களின் 8.9.3 ஆம் பிரிவு | முறையான உடன்படிக்கைகளில் கைசாத்திடாமல் ரூபா 500,000 பெறுமதியை விஞ்சி ஆறு சந்தர்ப்பங்களில் ரூபா 9,142,542 இற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) நிதி மற்றும் திட்டமிடல் | |

| | |
|---|---|
| அமைச்சின் சுற்றறிக்கைகள் | |
| (i) 2008 ஏப்ரல் 24 ஆந்திகதிய பிஎவ்/எவ்எஸ்/01/xxxv ஆம் இலக்கம் | தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து ரூபா 62,800 தொகைக்கு விமானப் பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2007 ஆகஸ்ட் 07 ஆந்திகதிய எம்ஓஎவ்ஏ/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்கம் | அடுத்துவரும் ஆண்டின் மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்காக நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பது அவசியமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக (மலேரியா சுற்று 8 கூறு) செயற்திட்டததின் நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 25 இலேயே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | மலேரியா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளிற்காக செயற்திட்டத்தால் சொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் மற்றும் தொடர்புபட்ட மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நிதிப் பிரமாணங்கள் | |
| (i) இல 371(2)(சீ) | முற்பணங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் இது வழங்கப்பட்ட நோக்கங்கள் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 26 சந்தர்ப்பங்களில் ரூபா 2,095,540 தொகையான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்வதற்கு 6 மாதங்களிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்ததென்பது அவதானிக்கப்பட்டது. |
| (ii) இல. 756 | ரூபா 85,196,210 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் பௌதீக மெய்மையாய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | தொகை | விபரங்கள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) மலேரியா புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்காக மலேரியா கட்டுப்பாட்டு இயக்கத்திற்கும் வட மேல் பல்கலைக் கழகத்திற்கும் இடையில் கைசாத்திட்ட உடன்படிக்கை | 1,416,000 | இந்நிகழ்ச்சித்திட்டம் 2011 யூன் மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் இது 2013 ஏப்ரல் வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) முற்பணங்கள் வழங்கல் | 416,365 | செலவுகளை முறையாக முன் அறியத் தவறியமை காரணமாக, 18 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணஙகளில் ரூபா 416,365 தொகை கருத்திற்கொள்ளவேண்டிய கால தாமதத்தின் பின்னர் காசாக தீர்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | 91,200 | 4 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட முற்பணங்கள் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தாமல் 01-04 வரையான காலவீச்சின் பின்னர் திரும்பவும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 7,315,495 | 2012 ஆம் ஆண்டிற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 7,315,495 ஆன ஒதுக்கீடுகளில், ரூபா 3,945,162 மாத்திரமே மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. |

## 3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களை அவை ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் இன்மையால் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

| விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்தல் | 548,250 | (i) கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் விபரங்கள்<br>(ii) விலைப் பட்டியல்<br>(iii) பொருட்கள் பெறுதலிற்கான சான்றிதழ் |
| (ஆ) வள நபர்களிற்கான படிகள் | 300,000 | உரிய தரப்பினரிடமிருந்து முறையான அங்கீகாரம் மற்றும் ஆதார ஆவணங்கள் |

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ஒவ்வொன்றும் ரூபா 3.75 வீதத்தில் 150,000 கைதவிர்க்க வேண்டிய இரத்த – lancent களை கொள்வனவு செய்வதற்காக வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் கட்டளை 2013 மே 15 இலேயே முன்வைக்கப்பட்டது. கட்டளையிடலிலுள்ள தாமதம் காரணமாக ரூபா 3.00 வீதத்தில் நாணயத் தளம்பல்ககளிற்காக ரூபா 450,000 தொகையை வழங்குநர் கோரியிருந்தார்.

# 4 நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

## 4.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தின் பாதீடு செய்யப்பட்டவற்றை உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பிடும் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கை திட்டத்தின்படி, மீளாய்வாண்டின் போது செலவு செய்வதற்கு ரூபா 335,191,005 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில், ரூபா 30,220,413 அல்லது 16.34 சதவீதம் நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தாமல் ஆண்டின் இறுதியில் திறைசேரிக்கு செயற்திட்டத்தால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக 18 நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 54,601,333 கூட்டுமொத்தத் தொகையான ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 36 செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பாதீட்டில் ரூபா 182,690,020 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 40,578,986 அல்லது மொத்த ஒதுகிகீட்டில் 22 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 15 நடவடிக்கைகளிற்காக பாதீட்டு ஏற்பாட்டை விஞ்சி ரூபா 10,696,530 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(உ) வருடாந்த பாதீட்டு ஏற்பாடு இல்லாமல் மீளாய்வாண்டின் போது 04 நடவடிக்கைகளிற்காக ரூபா 650,171 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

## 5. பௌதீக செயலாற்றல்

### (அ) மலோரியா நோயளிகளை இனங்காணல்

செயற்திட்டத்தின் மலேரியா கூறின் குறிக்கோளானது பி- பெல்பிபரும் மலேரியா நோயை ஒழிப்பதும் மற்றும் பி- விவக்ஸ் மலேரியா நோயின் 75 சதவீதத்தை கட்டுப்படுத்துவதுமாகும் 2012 ஆம் அண்டில் 23 உள்ளுர் மலேரியா நோயாளிகள் (04 பி- பெல்பிபரும் மலேரியா நோயபளி மற்றும் 19 பி- விவக்ஸ் மலேரியா நோயாளி) மற்றும் வேறு நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த 64 நோயாளிகள் என அறிக்கையிட்டிருந்தது.

### (ஆ) நீண்ட தொடர்ச்சியான பூச்சிகொல்லி வலையின் விநியொகம் (எல்எல்ஐஎன்)

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட 1,274,000 எல்எல்ஐஎன் (ஒலிசெற் மற்றும் ஐக்கூல் வகை) வலைகளில் 1,135,600 வலைகள் 2012 திசெம்பர் 31 அளவில் விநியோகிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 138,400 எல்எல்ஐஎன் வலைகள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆபத்தான நிலையிலுள்ள அதிகளவான மக்களைவிட ஆபத்தான நிலையிலுள்ள குறைந்தளவான பிரதேசங்களில் விநியோகங்கள்

செய்யப்பட்டிருந்தன. உதாரணமாக: கண்டி, மாத்தளை, ஹம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணம்.

(iii) பதுளை மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையை விட மிகையாக 4,201 எண்ணிக்கையான நுளம்பு வலைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(iv) கொள்வனவு செய்யப்பட்ட எல்எல்ஐஎன் நுளம்பு வலைகளில் ஒலிசெற் மற்றும் ஜோர்க்கூல் வகைகளின் மாதிரிகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அந்த நுளம்பு வலைகளில் பிரயோகிக்கப்பட்ட கிருமி கொல்லிகளால் கிருமி கொல்லிகளின் செயற்படு காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பட்டிருந்தனவா என்று பரிசோதிக்கப்பட்டிருந்தது. மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் 2012 திசெம்பர் 24 ஆந் திகதிய தரப் பரிசோதனை அறிக்கையின்படி, அந்த நுளம்பு வலைகளின் பரிசோதித்தலின் விளைவுகள் திருப்தியற்றிருந்ததென அறிக்கையிடப்பட்டிருந்தது.

(v) மலேரியா பிராந்திய அலுவலகத்தால் விநியோகிக்கப்பட்ட நுளம்பு வலைகள் தொடர்பிலான தரவு அடிப்படை செயற்திட்ட அலுவலகத்தால் பேணப்பட்டிருக்காததுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர்களிற்காக 181 பயிற்சி செயலமர்வுகளை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் போது 139 செயலமர்வுகள் மாத்திரம் நடைபெற்றிருந்தன.

(ii) 2012 ஆம் ஆண்டில் பயிற்சி செயலமர்வுகளில் பங்குபற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 6661 ஆக இருந்ததுடன் பங்குபற்றியோரின் உள்ளபடியான எண்ணிக்கை 3172 ஆக இருந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையின் 48 சதவீதமாக உள்ளது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பொருட் கொள்வனவுகள்

(ஆ) இருப்புக்கள்

(இ) நிதிகளைப் பயன்படுத்தல்

(ஈ) கட்டுநிதி மற்றும் முற்பணங்களைத் தீர்த்தல்

(உ) கணக்கீடு